NOOLAHAM
FOUNDATION

# Setup Upcountry Unit for Noolaham Foundation

## Project Report

## 2020

www.noolahamfoundation.org

| | |
|---|---|
| செயற்றிட்ட தலைப்பு | நூலகம் நிறுவனத்தின மலையக பிராந்தியத்திற்கான அலகின் ஒழுங்கமைப்பு செயற்றிட்டம் |
| செயற்றிட்ட எண் | NF/PG/2019/0081 |
| செயற்றிட்ட இடம் | இலங்கை |
| செயற்றிட்ட காலம் | 01.07.2020 - 31.12.2020 |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலக நிறுவனம் |
| முக்கிய பங்குத்தாரர்கள் | மெய்யநாதன் |

## நூலக நிறுவனம்

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்துவதில் ஈடுபட்டு வரும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளை நூலக நிறுவனம் முன்னெடுத்து வருகிறது.

## செயற்றிட்டச் சுருக்கம்

நூலக நிறுவனத்தின் மலையகம் சார்ந்த செயற்பாடுகளுக்கான கேந்திர நிலையம் ஒன்றை நுவரெலியா மாவட்டத்தில் நிறுவுதல். அதனுடாக மலையகம் சார்ந்த ஆவணங்களையும், முக்கிய செயற்பாடுகளையும் ஆவணப்படுத்தல்.

## அறிமுகமும் பின்புலமும்

நூலக நிறுவனத்தின் கொள்கைகளோடு இசைந்த செயற்பாட்டுப் பன்மைத்துவம் மற்றும் பல்வகைமை ஆகியவற்றை அடைவதில் மலையகம் சார்ந்த ஆக்கங்களின் ஆவணப்படுத்தல் முக்கியத்துவம் மிக்கதாகும். இந்த வகையில் மலையகத்தின் கல்விச் சமூகத்தை தன்னிணைத்துக் கொண்டு அங்கு எற்கனவே உள்ள அறிவுச் சேகரத்தில் ஆவணங்களை எண்ணிமப்படுத்துதல் முக்கியமிக்கதாகவும் அடைவுச் செறிவுள்ளதாகவும் இருக்கும். இந்தப்பின்புலத்தில் நூலக நிறுவனத்தின் ஆவணமாக்கல் செயற்பாடுகள் இலங்கையில் சகல பாகங்களிலும் நடைபெற்றுக்கொண்டிருந்தாலும் அதன் அடைவை அதிகரிப்பதற்கும், யாழ் அலுலகத்தில் இருந்து தூரம் இடைவெளி போன்ற பல நடைமுறையில் ஏற்படும் சிக்கல்களை குறைப்பதற்கும், பிராந்திய ரீதியில் இயங்கு நிலை அலுவலகங்களை நிறுவி அதனூடாக செயற்பாடுகளை இலகுபடுத்தல்.

மலையகத்தில் ஆவணப்படுத்தல் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் அங்கு காரியாலயங்கள் எதுவும் அமைக்கப்படவில்லை. ஆரம்ப நிலையில் மலையகத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற பலரினதும் வாய்மொழி வரலாறுகள் எடுக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டன. அதற்கு பின்னர் தொழிற்கலை ஆவணப்படுத்தல் செயற்றிட்டம் மலையகத்தில் மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறான செயற்றிட்டங்களின் வினைத்திறனான அமுல்ப்படுத்தலுக்காகவும் இவ்வாறான செயற்றிட்டங்களின் விரிவாக்கத்திற்காகவும் 2020 ஆம் ஆண்டு ஆடி மாதம் ஹட்டன் இல் மெய்யநாதன் என்பவரின் அச்சுப்பதிப்பகத்தின் ஒரு பகுதி மட்டுப்படுத்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்களுடன் ஒழுங்குசெய்யப்பட்டது. இவ்வாறே மலையகத்தில் நூலக நிறுவன பிராந்திய நிலையமொன்றை நிறுவுவதற்கான வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

## இலக்குகளும் நோக்கங்களும்

மலையகத்தில் உள்ள தமிழ் பேசும் சமூகங்களில் காணப்படுகின்ற ஆவணங்களை சேகரித்து எண்ணிமப்படுத்தலை நோக்கமாகக் கொண்டு மலையகத்தில் செயற்பாட்டு விரிவாக்கத்திற்காக அலுவலகம் ஒன்றை நிறுவுதலை நோக்கமாகக் கொண்டு இச்செயற்றிட்டம் மேற்கொள்ளப்பட்டது.

## செயற்பாடுகள்

- மலையகத்தில் நூலக நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கு பொருத்தமான இடத்தினை தெரிவு செய்தல்.
- இடத்தை பெற்றுக்கொள்ள உரிமையாளரிடம் உரையாடல் மற்றும் அவர்களுக்கான விளக்கத்தை கொடுத்தல்
- இடத்தினை பெற்றுகொள்வதற்கான ஒப்பந்தத்தினை செய்வதற்குரிய அலுவலக நடவடிக்கைகள்
- இடத்தை பயன்படுத்துவதற்கான ஒப்பந்தத்தினை மேற்கொள்ளல்
- இடத்தினை பொறுப்பேற்றல்
- இடத்தினை அலுவலகமா மாற்றுதல்
- அலுவலகத்திற்கு தேவையான தளபாடம் மற்றும் உபகரணங்களை பெற்றுக்கொள்ளல் மற்றும் அவற்றை ஒழுங்குபடுத்தல்
- அலுலகங்களுக்கு அலுவலகர்களை இணைத்துக்கொள்ளல்
- இணைக்கபட்ட அலுவலகர்களுக்கு தொழில்நுட்ப மற்றும் அலுவலக நடைமுறை பயிற்சிகளை வழங்கல்
- அலுவலகத்தின் சுகாதார நடைமுறைகளை பேண வழிவகுத்தல்
- அலுவலகதின் நோக்கம் மற்றும் நூலக நிறுவனத்தின் நோக்கங்களை சமூகமயப்படுத்தல்
- அலுவக இயங்கு நிலையின் சீர்தன்மையை கண்காணித்தல்

அடைவுகள்

- மலையகத்தில் அலுவலகத்தை நிறுவியமை
- ஆவணப்படுத்தல் சார்ந்த வேலைத்திட்டங்களை மேற்கொண்டமை
- எண்ணிமப்படுத்தலை மேற்கொள்வதற்கான தொடர்புகள் கிடைத்தமை
- மலையகத்தில் ஆளுமைகளை கண்டறியவும் ஆவணப்படுத்தவும் தொடங்கியமை.
- தொடர்ந்தும் பல செயற்றிட்டங்களை மலையகத்தில் செயல்படுத்துவதற்கான வாய்ப்புக்களை உருவாக்கியமை

எதிர்கொண்ட சவால்கள்

- நூலகம் நிறுவனத்தின் பணிகள் சம்பந்தமான தெளிவு சமூகத்தில் இல்லை
- நூலக நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கு பொருத்தமான ஒரு அலுவலகத்திற்கான இடத்தினை அடையாளப்படுத்துவதில் காணப்பட்ட சிக்கல்களும் சவால்களும்

கற்றல்களும் பரிந்துரைகளும்

- ஊழியர் பற்றாக்குறை இருந்தமையால் வினைத்திறனான அடவைப் பெற முடியாமை எதிர்காலத்தில் அனுபவப் புலம் மிக்க ஊழியர்களை இணைத்தல்
- நூலகம் நிறுவனம் பற்றிய விழிப்புணர்வு செயற்பாடுகளை சமூகமட்டத்தில் அதிகமாக பரவலடையச் செய்தல்.